

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு சாகுபடியை அதிகரித்தல் மற்றும் சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை உயர்த்துவது குறித்து கரும்பு விவசாய சங்க பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள், கரும்பு விவசாய அங்கத்தினர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் 09.05.2025 அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், சர்க்கரைத்துறை இயக்குநர் டி.அன்பழகன், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் வீ.இரவி, முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம்.பெ.சுப்பிரமணி, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காய்த்ரி, பாலக்கோடு பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளனர்.

## தி.மு.க. மருத்துவ அணி

# நீலகிரி மாவட்ட மற்றும் சட்டமன்றத் தொகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மருத்துவ அணியின் நீலகிரி மாவட்ட மற்றும் சட்டமன்றத் தொகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### நீலகிரி மாவட்டம்

தலைவர் - ஆனந்தவள்ளி, எம்.பி.பி.எஸ்., 118, லாலீ காம்பவுண்ட், குன்னூர் - 643101.

துணைத் தலைவர் - ஜே. சுப்பிரமணி, எம்.பி.பி. எஸ்., 228, ப்ரூக்லாண்ட்ஸ், குன்னூர்.

அமைப்பாளர் - என்.பி. பவிஷ், எம்.பி.பி.எஸ்., எம். டி., 2/392, இலத்தலார், உதகை.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. ரூபேஷ், டி.எம். எல்.டி., 33, மவுண்ட் பிளசென்ட், குன்னூர். 2) சு. வினோத், சிடி டெக்னீசியன் 54, அப்பர் சர்ச் ரோடு, குன்னூர், நீலகிரி. 3) பி. ராமச்சந்திரன், ஜி.என்.எம். 23, காந்தி கிராமம், குன்னூர். 4) ஆர். உன்னிகிருஷ்ணன், டி.எம்.எல்.டி., 33, மவுண்ட் பிளசன்ட் குன்னூர்.

### குன்னூர் சட்டமன்ற தொகுதி

அமைப்பாளர் - மைக்கேல், 326/4, பாலாஜி நகர், அருவங்காடு, குன்னூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜி. சாலினி , டி.எம். எல்.டி., 3/6, ஓதநட்டி ஜெகதளா. குன்னூர். 2) எல். சாந்தி, சி.எம்.எல்.டி., 54, ஆழ்வார்பேட்டை, குன்னூர், நீலகிரி. 3) சி. உமாசங்கர், பி.எஸ்சி., டி.எல். எம்.டி., 8344, விநாயகா அவென்யூ, ஜெகதளா, நீலகிரி. 4) ஏ. ஜென்சி, டி.எல்.எம்.டி., 3/265, லூர்துபுரம் வெலிங்டன், குன்னூர்.

### உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி

அமைப்பாளர் - ஆர். நந்தகோபால், கலைஞர் கருணாநிதி காலனி, மஞ்சனக்கோரை, உதகை, நீலகிரி.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். ராய் செபாஸ்டின், டி.எல்.எம்.டி., 18, பாஸ்கோலின் பொ்னில் அஞ்சல், உதகை, நீலகிரி. 2) எம்.கீதா, டி.எல்.எம்.டி., 110, டேவிஸ்டேல் காம்பௌண்ட், உதகை, நீலகிரி.

### கூடலூர் சட்டமன்ற தொகுதி

அமைப்பாளர் - நரேந்திரபாபு, எம்.பி.பி.எஸ்., டி.ஏ., லஷ்மி கிளினிக், ஸ்ரீராம் காம்ப்ளக்ஸ், கூடலூர், நீலகிரி.

துணை அமைப்பாளர்கள் - 1) லதா, டி.எம்.எல்.டி., லேப் கேர் ஆய்வகம், மசினகுடி, கூடலூர், நீலகிரி. 2) ஆபிரகாம், டி.எம்.எல்.டி., ஆல்பா ஆய்வகம், கூடலூர், நீலகிரி. 3) என். கலைச்செல்வன், பி.பார்ம், 11/210, ஓம். சக்தி கோவில் வீதி, எம்.ஜி.ஆர். நகர், கூடலூர், நீலகிரி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-05-2025.

டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க. மருத்துவ அணி





"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம் பாளையம் தொகுதி சரவணம்பட்டி பகுதியில் பகுதி கழக செயலாளர் சிறுவை சிவா ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தலைமை கழக பேச்சாளர் சி.எ.கலீம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர் ஏ.அசோக் பாபு, எம்.கே.எம்.செந்தில் உள்பட மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.





நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் ராதாமங்கலத்தில் நாடுபோற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெரு முனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவர் என். கௌதமன் பேசினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் சோம. செந்தமிழ்செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பழனியப்பன், இளம் பேச்சாளர் பா.அருண்குமார் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளனர்,

## இன்று நினைவு நாள்!

# சரித்திரச்செம்மல் எஸ்.ஜே.சாதிக்பாட்சா!



**அண்ணா அமைச்சரவையில் சாதிக்**

**1967** ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் குறிப்பிட்ட முகாமையான ஏழு பேர் மட்டுமே கொண்ட அமைச்சரவையில் சுகாதாரத்துறை அமைச்சராகப் பொறுப்பாற்றியவர் சாதிக்பாட்சா. அதனைத் தொடர்ந்து கலைஞரின் அமைச்சரவையில் கலைஞர் தாம் வகித்த பொதுப்பணித்துறையை கொடுத்து திறம்படப் பணியாற்றியவர்.

1969 ல் மத்திய அரசுக்கு வழங்கிய ராஜமன்னார் குழுவின் கோரிக்கையை 1972 இல் கலைஞரின் பிறந்த நாள் மலருக்காக மாநில சுயாட்சி எனும் கட்டுரையை எழுதியவர். பின்னே அவரே மாநில சுயாட்சி எனும் 126 பக்க நூலையும் எழுதியவர்.

பேரறிஞர் அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற சொற்களைத் தம் குடும்பத்தாரிடம் ஒரு நாளைக்குக் கண்டிப்பாக நான்கு அல்லது ஐந்து முறைக்கு மேல் சொல்லிக்கொண்டே இருப்பார். தம் வாழ்நாள் முழுமைக்கும் இந்த சொற்களையே அதிகம் பயன்படுத்தியதாக அவரது துணைவியார் திருமதி. ஷர்புன்னிசா தெரிவித்தார்.

**சாதிக்கின் தோற்றம்**

1928 மே 26 ல் உடுமலைப்பேட்டையில் பிறந்திட்டாலும் இவரது குடும்பப் பின்னணி நீதிக்கட்சியோடும், மிகப்பெரிய திவான் குடும்பத்தோடு தொடர்புடையது. இவரது பெரியப்பா இதில் சையத் திவான் அப்துல் ரசாக் உடுமலைப்பேட்டையை நகராட்சியாக நிலை உயர்த்த அதற்காக அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினைச் செலுத்தித் தொடர்ந்து ஒன்பது ஆண்டுகள் போட்டியின்றி தலைவராக இருந்தார். மேலும் 1917 ல் கோவையில் தென்னிந்தில நல உரிமைச் சங்கத்தின் சார்பில் பார்ப்பனரல்லா முதல் மாநில மாநாட்டின் வரவேற்புக் குழு உறுப்பினராகவும், மாநாட்டுத் தலைவர் ராமராய நிங்கர் (பனகல் அரசரை) முன்மொழிந்தவராகவும் இருந்தார். தென்னிந்திய நல உரிமைச்சங்கத்தில் உறுப்பினராகவும் இருந்தார். அப்போதைய கோவை ஜில்லா போர்டு மெம்பராகவும், நீதிக்கட்சியில் மாநிலத்துணைத்தவைராகவும் இருந்தவர். 1900 க்கு முன்பு லண்டன் சென்று சட்டம் படித்தவர். உடுமலைப்பேட்டை நகராட்சியை உருவாக்கியவர். அனைத்து மக்களின் சார்பாக முன்னூறு ரூபாய் வரி கட்டியவர். இதனால் 1917 முதல் 1926 வரை தொடர்ந்து உடுமலை நகர மன்றத் தலைவராக இருந்தவர்.

1944 ல் கணியூரில் தனது வகுப்புத்தோழமை கே.ஏ.மதியழகன் மூலமாக முதன் முதலாக அண்ணாவைச் சந்தித்தவர். அன்று முதல் அண்ணாவின் மீதும், அண்ணாவின் பேச்சுக்களின் மீதும், எழுத்துக்களின் மீதும் தீராக்காதல் கொண்டார். இதனால் தம் வாழ்க்கைப்பாதையினை முழுமையாக அண்ணாவின் சொற்படியே மாற்றி அமைத்துக் கொண்டார்.

1945-46 ல் வாணியம்பாடி இஸ்லாமியக்கல்லூரியில் புதுமுக வகுப்பு படிக்கும் போதும் ,சென்னை இஸ்லாமியக் கல்லூரியில் இளங்கலை படிக்கும்போது தமிழ் மன்றத்தின் செயலாளராக இருந்தபோது அண்ணாவை அழைத்து வந்து தம் கல்லூரியில் பேச வைத்தவர் சாதிக்பாட்சா.

**நெருக்கடி காலத்தில் கலைஞருக்கு உதவிய சாதிக்**

1976 இந்தியாவின் நெருக்கடி காலத்தில் தலைவர் கலைஞருடன் இருந்த அனைவரும் அன்பகத்திற்கு வருவதற்கே பயந்தபோது சாதிக்பாட்சா கலைஞருக்கு அணுக்காகவும், நெருக்கமாகவும் உடனிருந்து அலுவலகத்தின் அடிப்படையான தூய்மைப்பணிகளைச் செய்தவர் சாதிக்பாட்சா. இந்த செயல்பாடு குறித்து கலைஞர் தனது நெஞ்சுக்கு நீதியில், சாதிக்பாட்சா என்னுடைய அமைச்சரவையிலே அமைச்சராக இருந்தார். அண்ணாவினுடைய அமைச்சரவையிலும் அமைச்சராக இருந்தார். அந்த சாதிக்பாட்சா ஒரு முன்னாள் அமைச்சர். தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட நேரம், ஐநூறுக்கும் மேற்பட்ட கழக உடன்பிறப்புகள் சிறைக்கொட்டடிகளில் அடைக்கப்பட்டு வதைக்கப்பட்டு அடிக்கப்பட்டு எலும்பு நொறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கிற வேளை.

அதே நேரத்திலே சாதிக், தலைமை நிலையங்களில் ஒன்றான அன்பகத்தில் ஒரு கடைநிலை ஊழியரைப் போல பணியாற்றிய விதத்தை நான் மறைகிற வரையில் மறக்கமுடியாது." என்று தலைவர் கலைஞர் பதிவு செய்துள்ளார்.

1955 இல் வழக்கறிஞர் பணியோடு திராவிட முன்னேற்றக்கழகத்தின் கட்சிப்பணிகளுக்கும் வருகை தருகிறார். 1956ல் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சத்தியவாணிமுத்து பேச இருக்கும் முதல் கூட்டத்தின் தலைமையாக சாதிக்பாட்சா பெயர் போட்டு துண்டறிக்கை அச்சிடப்பட்டது. அப்பொழுதிருந்த இஸ்லாமியர்கள் தி.மு.க கட்சியை (சாமி இல்லென்னு) சொல்ற கட்சியில் நம்ம சாதிக் சேர்ந்திட்டாரு இதனால் இவர் இறந்தால் இவருக்கு மசூதியிலிருந்து செய்ய வேண்டிய சடங்குகள் செய்யப் படமாட்டாது என்று அறிவிப்பு கொடுத்தனர். அதையும் மீறி தி.மு.க.வில் சேர்ந்து கழகப்பணியோடு வழக்கறிஞர் பணிகளையும் சிறப்புற மேற்கொண்டார்.

கடமை,கண்ணியம், கட்டுப்பாடு இது வெறும் சொற்கள் அல்ல; வாழ்க்கை என வாழ்ந்து காட்டியவர் !

சென்னை தியாகராயர்நகரில் அவரின் துணைவியார் திருமதி. ஷர்புன்னிசா வுக்கு அவர் தந்தை கொடுத்த வீட்டிற்கு வரச்சொன்ன போது (வரமாட்டேன் என்று சொல்லி) கடைசி வரைக்கும் பட்டினப்பாக்கம் வீட்டில்தான் இருப்பேன். இல்லையென்றால் உடுமலை வீட்டுக்குப் போய்விடுவேன். எந்தக்காரணத்தைக்கொண்டும் யார் வீட்டிற்கும் வரமாட்டேன். "அவ்வாறு வந்தால் தான் அமைச்சராகி சம்பாதித்த பணத்தில் சொந்த வீடு கட்டிவிட்டார் என்று சொல்லி விடுவார்களோ" என மனச்சான்றின் அச்சத்தில் கடைசி வரைக்கும் அவர் பட்டினப்பாக்கம் வீட்டிலேயேதான் இருந்தார். அங்குதான் அவர் இறந்தும் உடல் கிடத்தப்பட்டது.

கிட்டத்தட்ட பதினோரு ஆண்டு காலம் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், சட்டமேலவை உறுப்பினர், என வாழ்ந்திட்ட பெருமகன் சாதிக்பாட்சா. கடைசி வரை சென்னையில் சொந்த வீடோ, வாகனமோ என அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை,

ஆனால் கோடான கோடி கழக உடன்பிறப்புகளின் நெஞ்சத்தில் இன்னமும் அன்பின் உருவமாக, நேர்மையின் சின்னமாக, பண்புப்பெருந்தகையாக் குடிகொண்டிருக்கும் சாந்தமே உருவான சாதிக்பாட்சா அசையா சொத்தாக இன்னமும் வீற்றிருக்கிறார் என்பதே உண்மை.

எஸ்.ஜே.சாதிக்பாட்சாவில் வரலாற்றில் கோவை பி.எஸ். ஜானகிராமன் பெயரும் இடம் பெறுகிறது. ஏனென்றால் எஸ். ஜே.சாதிக்பாட்சா இறந்த போது அவர் வீட்டு வாசலில் இறந்தவர் பி.எஸ்.ஜானகிராமன்.

இன்று மே 12, கழகத்தின் பொருளாளர், சரித்திரச்செம்மல் சாதிக்பாட்சவை நினைவு கூர்வோம்.

**உடுமலை அருள்செல்வன்**
*- வரலாற்று ஆய்வாளர்*





திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒலி, ஒளி காட்சி அமைப்பினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.





தருமபுரி கிழக்கு மாவட்டம், ஏரியூரில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் என்.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி, முன்னாள் தருமபுரி மாவட்ட கழக பொறுப்பாளர் பி.என்.பி.இன்பசேகரன், தலைமைக் கழக பேச்சாளர்கள் சேலம் சுஜாதா,தலைமைக் கழக இளம் பேச்சாளர் த.தங்கமுத்து, ஆகியோர் கழக ஆட்சியின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்வில் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.ஜி.சம்பத்குமார், பச்சமுத்து,சின்னு, சுப்பிரமணி, ஆசி தனபாலன்,முருகன் பெருமாள், தென்னரசு மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.